

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (11.06.2025) சென்னை, தேனாம்பேட்டை. டிஎம்எஸ் வளாகத்தில் உள்ள பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துத்துறை இயக்குநகரத்தில், "சிக்கலுள்ள கர்ப்பங்களுக்கான சிகிச்சை வழிகாட்டுதல்கள் பயிற்சி கருத்தரங்கத்தினை" தொடங்கி வைத்து விழா உரையாற்றினார். இந்நிகழ்வில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அரசு முதன்மைச் செயலாளர் முனைவர் ப.செந்தில்குமார். தேசிய நலவாழ்வு குழும இயக்குநர் மரு.அருண்தம்புராஜ், பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துத்துறை இயக்குநர் மரு.செல்வவிநாயகம், உலக சுகாதார நிறுவனம் மகப்பேறு மருத்துவ அலுவலர் மரு. பிரியங்கா சிங், கூடுதல் இயக்குநர் மரு.சோமசுந்தரம், இணை இயக்குநர்கள் மரு.நிர்மல்சன் மற்றும் பொது சுகாதாரத்துறை கூடுதல் இயக்குநர்கள். இணை இயக்குநர்கள், மாவட்ட சுகாதார அலுவலர்கள், மருத்துவ அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



திருவள்ளூர் மாவட்டம் ஆவடி சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட திருநின்றவூர் நகராட்சி 8 மற்றும் 10 ஆகிய வார்டுகளில் 6 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மழைநீர் கால்வாய் மற்றும் சாலை அமைக்கும் பணிகள் துவக்க விழா நடைபெற்றது இதில் தமிழ்நாடு சிறுபான்மை மற்றும் வெளிநாடு வாழும் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சாமு.நாசர் பணிகளை துவக்கி வைத்து பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கினார். நிகழ்ச்சியில் நகர கழகச் செயலாளர் தி.வை.இரவி, நகராட்சி ஆணையர் செல்வி கீர்த்தனா, நகர மன்ற உறுப்பினர் உஷாராணி வெங்கடேசன் உள்பட அரசு அதிகாரிகள் நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

### ந.கோபால் தலைமை! எஸ்.டி.கருணாநிதி – இரா.சதீஷ்குமார் வரவேற்புரை!

# திருப்பெரும்புதூர் தெற்கில் கலைஞர் பிறந்த நாள் பொதுக்கூட்டம் - நலஉதவிகள் வழங்கல்!

### டி.ஆர்.பாலு எம்.பி.- அமைச்சர் தா.மோ.அன்பரசன்–ஆலந்தூர் மலர்மன்னன்- முரசொலி மூர்த்தி சிறப்புரை!

திருப்பெரும்புதூர், ஜூன்.12

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், திருப்பெரும்புதூர் தெற்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102 வது பிறந்த நாள் -செம்மொழி நாளை முன்னிட்டும் கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான திராவிட மாடல் அரசின் நான்காண்டு சாதனைகளை விளக்கியும் மாபெரும் பொதுக் கூட்டம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா இன்று (12.6.2025-வியாழக்கிழமை) மாலை 5 மணிக்கு வல்லக்கோட்டை மெயின் ரோட்டில் நடைபெறுகிறது.

கூட்டத்திற்கு தெற்கு ஒன்றியச் செயலாளர் ந.கோபால் தலைமை வகிக்கிறார். வடக்கு ஒன்றியச் செயலாளர் எஸ்.டி. கருணாநிதி, நகர செயலாளர் இரா.சதீஷ்குமார், ஜா.செந்தில்தேவராஜ், ஜெகன்குமார், ஏ.மோகனன், க.ரவிச்சந்திரன், சுபரஞ்சினிகன்னியப்பன்,ப.பரமசிவன், எஸ்.ஏ. சர்தார் பாஷா, பி.ஆர். நேரு ஆகியோர் வரவேற்புரையாற்றுகின்றனர்.

வி.எம்.ஜானகிராமன், க. முருகன், ச.தேவேந்திரபாபு, மாலாதனசேகரன், கு.செங்குட்டுவன், ஜா. சிவா எத்திராஜ், மகேந்திரன், மு.கர்ணன், குடா மணிமதுரை, ப.செந்தில், பெ.சதீஷ், அப்துல் ரகிம், ச.சிவப்பிரகாச, பிரகாஷ், கே. வெங்கடேசன், செ. தனசேகரன்,க.சுப்பிரமணி ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இக் கூட்டத்தில் தலைமைக் கழகப் பேச்சாளர்கள் ஆலந்தூர் மலர்மன்னன், முரசொலி மூர்த்தி ஆகியோர் சிறப்புரையாற்றுகின்றனர்.

நலத்திட்ட உதவிகளை வழங்கி கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி., மாவட்டக் கழகச் செயலாளர் -அமைச்சர் தா.மோ. அன்பரசன் ஆகியோர் சிறப்புரையாற்றுகின்றனர்.

மேலும் இக் கூட்டத்தில், கே.ஜி.பாஸ்கர் சுந்தரம், த.துரைசாமி, படப்பை ஆ.மனோகரன், அ.தமிழ்மாறன், மா.கணேஷ் பாபு, சாந்தி சதீஷ்குமார், மாலதி போஸ்கோ, இந்திராணி சுப்பிரமணி, ப.ராமமூர்த்தி, எஸ்.கே.பாலாஜி, முருகன்,எல்.டி.ஜார்ஜ், த. தணிகாசலம், கோ.வினாயகமூர்த்தி, பா.முத்துகுமாரசாமி, இரா.அருண்பாரத், ஏ.டோம்னிக், டாக்டர் ஓவியா முருகன், எ.அரிகிருஷ்ணன், ஜா.முனிரத்தினம், பி.ரவி, இரா.பிரகாசம், நா.சத்யா, ஏ.முரளிதரன், இரா.வெங்கடேசன், எஸ்.டி.கே.சபரிராஜா,ஜி. எஸ்.குமார், ஜெ.சிவபாதம், பி.கலைமோகன், தி.பிரபாகரன், நளினாசின்னகண்ணு, மா. மணிவண்ணன், ச.வேலுமணி, எ.நாசர், இ.முனிகிருஷ்ணன், மல்லிகாரவிச்சந்திரன், கோமதி கணேஷ்பாபு, கலைச்செல்வி கோபால், த.விஜய லட்சுமி, பி.குமார், ஆர்.காத்தவராயன், ஜி. கே.கார்த்திகேயன், பி.ஆர். சம்பத், என்.சாதிக்பாஷா, பாபு என்கிற புருஷோத்தமன், எஸ்.ரவி, பி.சரவணன், கே.ஸ்ரீதரன், டி.பி. மாணிக்கம், எஸ்.பிரபாகரன், ஆர்.சரவணன்எல். மணி, பி.எஸ்.முரளி, டி. பாபு, எஸ்.தாமோதரன், எம். விவேக்,எல்.டில்லிராஜா, டி.வீரபத்தின், எஸ்.சீனிவாசன், எம்.பாபு,என்.ஜலபதி, எம்.பரமாத்மா, டி. எம்.சீனிவாசன், தேவி புருஷோத்தமன், நிர்மலா மகேஷ், நர்மதா மோகனகிருஷ்ணன், வில் லிமாணிக்கம், இந்துமதிநவீன் குமார், டி.வீரபத்திரன் மற்றும் பலர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர். காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் ப.இராமமூர்த்தி நன்றி கூறுகிறார்.

### பகுதிச் செயலாளர் எஸ்.சேகர் எம்.சி. தலைமையில் – முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்தநாள் விழா!

# பெருங்களத்தூர் தெற்கு பகுதியில் கழக அரசின் சாதனை விளக்கப் பொதுக்கூட்டம் - நல உதவிகள்!

### டி.ஆர்.பாலு எம்.பி. – அமைச்சர் தா.மோ.அன்பரசன் – சிவாஜி கிருஷ்ணமூர்த்தி – எஸ்.ஆர்.ராஜா – இ.கருணாநிதி சிறப்புரை!

சென்னை,ஜூன்.12-

தாம்பரம் மாநகரம், காஞ்சி வடக்கு மாவட்டம், பெருங்களத்தூர் தெற்கு பகுதி தி.மு.க. சார்பில் முத்தமிழறிஞர் கலைஞரின் 102 வது பிறந்தநாள் விழா, கழக அரசின் 4 ஆம் ஆண்டு சாதனைகளை விளக்கி மாபெரும் பொதுக்கூட்டம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா இன்று (12.6.2025 - வியாழக்கிழமை) மாலை 6:00 மணி அளவில் காமராஜர் நெடுஞ்சாலை கலைஞர் திடலில் நடைபெறுகிறது.

இம்மாபெரும் பொதுக் கூட்டத்திற்கு பெருங்களத்தூர் தெற்குப் பகுதி செயலாளர் பெருங்களத்தூர் எஸ். சேகர் எம்.சி. தலைமை வகிக்கிறார்.

பி.புகழேந்தி எம்.சி., வ.க. ரவிச்சந்திரன், கே.சாமுண்டீஸ்வரி, எஸ்.கமலா சேகர் எம்.சி., எஸ்.மதுமிதா மதன் எம்.சி., எஸ்.ராஜேஸ்வரி சங்கர் எம்.சி., டி.ஜெபதுரை, ஜெ.குப்புசாமி, எஸ்.சிவகுமார், வி.யோபு ஆகியோர் வரவேற்புரையாற்றுகின்றனர்.

எஸ்.ஐசக், க.குருநாதன், கே.வெங்கடேசன், பி.சுரேஷ், ஆர்.சஞ்சீவி, ஆர். மஞ்சுநாதன், எஸ்.மலைராஜன், டி.கே.கோட்டி, வி.நடராஜன், எஸ்.சோமசுந்தரம், ஆர்.பரஞ்சோதி, டிப்பர் ரவி (எ) டி.கே.எட்டியப்பன், எம்.துளசிராமன், ஆர்.நேரு, லயன் ஆர்.ரேமன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இம்மாபெரும் பொதுக் கூட்டத்திற்கு கழகப் பொருளாளர், நாடாளுமன்ற கழகக் குழு தலைவர் டி.ஆர். பாலு, காஞ்சி வடக்கு மாவட்ட கழக செயலாளர், அமைச்சர் தா.மோ.அன்பரசன் ஆகியோர் கலந்துகொண்டு நலத்திட்ட உதவிகளை வழங்கி சிறப்பிக்கின்றனர்.

தலைமைக் கழக பேச்சாளர் சிவாஜி கிருஷ்ணமூர்த்தி, தாம்பரம் மாநகரச் செயலாளர் எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ., இ.கருணாநிதி எம்.எல்.ஏ., தொகுதி பொறுப்பாளர் பரிதி இளம் சுருதி ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றுகின்றனர்.

மேலும் இக்கூட்டத்தில் தாம்பரம் மாநகராட்சி மேயர் க.வசந்தகுமாரி, துணை மேயர் ஜி.காமராஜ், மண்டலக் குழு தலைவர்கள் எஸ்.இந்திரன், டி.காமராஜ், தலைமை செயற்குழு உறுப்பினர் ஆதிமாறன், தலைமை பொதுக்குழு உறுப்பினர் லயன் ஆர்.எஸ்.சங்கர், இரா. ரத்தினகுமார், பொன்.சதாசிவம், எஸ்.ஜி.கருணாகரன், எம்.ராமமூர்த்தி, இ.விக்கி (எ) விக்னேஸ்வரன், ச. ராஜேஷ், மங்களபுரம் எம். பாபு, இளைஞரணி அமைப்பாளர் ஆர்.ஓம்பிரகாஷ், துணை அமைப்பாளர்கள் பா.கார்த்திக் ராஜா, ஏ.குமரன், த.மணிகண்டன், ஆர்.கதிரவன், டி.சுரேஷ், கே.எஸ். யுவராஜ், ஆர்.அருண்குமார், இரா.தேவராஜ், டி.ராஜேஷ், இ.ரமேஷ் மற்றும் வார்டுக் கழக நிர்வாகிகள், தளபதி ஆட்டோ சங்க ஓட்டுநர்கள், கழக மூத்த முன்னோடிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்ற னர்.

நிறைவாக பகுதிப் பொருளாளர் ஜெ. மணிவண்ணன், மாநகரப் பிரதிநிதி கே.சுந்தர் ஆகியோர்நன்றிகூறுகின்றனர்.

### ஒன்றியச் செயலாளர் மீ.வே.கர்ணாகரன் ஏற்பாட்டில் - முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்தநாள் விழா!

# சோழவரம் தெற்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் கல்வி ஊக்கத் தொகை - நல உதவிகள்!

### மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. வழங்கினார்!

சென்னை, ஜூன் 12-

சென்னை வடகிழக்கு மாவட்டம், சோழவரம் தெற்கு ஒன்றிய தி.மு.க. சார்பாக முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் 102வது பிறந்தநாளை முன்னிட்டு மாபெரும் பொதுக்கூட்டம் மொண்டியம்மன் நகரில் மாவட்ட கழக செயலாளரும் சட்டமன்ற உறுப்பினருமான மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ., தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் பாடிய நல்லூர் அரசினர் மேல்நிலைப் பள்ளியில் 10ம் வகுப்பு, 12ம் வகுப்பில் இறுதி ஆண்டு தேர்வில் முதல், இரண்டாம், மூன்றாம் இடத்தில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு ஊக்கத் தொகையும் ஆதரவற்ற ஏழைப் பெண்களுக்கு தையல் இயந்திரம், தள்ளு வண்டி, மூன்று சக்கர வாகணங்களை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியை சோழவரம் தெற்கு ஒன்றிய செயலாளர் மீ.வே.கர்ணாகரன் சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தார்.

இந்நிகழ்ச்சியில் ஒன்றிய நிர்வாகிகள் ஏ.காசீம் முகம்மது, கே.எம்.துரைவேல், ப.சீனிவாசன், இரா.விஜயன், செ.அரசு, பா.சேகர், பொன் கோதண்டன், மாவட்ட விளையாட்டு அணி அமைப்பாளர் சன் முனியாண்டி, மாவட்ட துணை அமைப்பாளர்கள் நா.பரசுராமன், வி.ஞானம், ப.சு.க.இளங்கோவன், ஜி.சுப்பிரமணி, மு.கீதா ராமன், எம்.ஜி.கார்த்திக், டி. பத்மநாபன், ஜி.பூபா லன், எம்.இரத்தனமாலா, ஆர். துளசி, ஜெ.சிவகாமி, எஸ். சரஸ்வதி, ஆர்.ராதிகா, என்.முகமதுஅலி, எஸ். டி.சுந்தரமூர்த்தி மற்றும் முன்னாள் ஊராட்சி மன்றப் பிரதிநிதிகள், கிளை கழக செயலாளர்கள், கிளை நிர்வாகிகள், கலந்து கொண்டனர்.

இந்நிகழ்ச்சியில் ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் ஜெகன், ஒன்றிய மாணவர் அணி அமைப்பாளர் ஏ.கே.கௌதம், ஆர். குமரன், என்.விஜய், ஆர். சி.சிவசங்கர், ஜெ.மைக்டைசன், கே.பாலாஜி, எம். எஸ்.மணிகண்டன், ஆர். ரூபேஷ்,கே.கவியரசு, டி. சம்பத்குமார், எஸ்.பார்த்திபன், சன்.எம்.முகமதுரபிக் ஆகியோர் நன்றி உரையாற்றினர்.



திருவள்ளூர் மாவட்டம் திருத்தணி தொகுதிக்குட்பட்ட பள்ளிப்பட்டு ஒன்றியம் கிச்சலம் ஊராட்சியில் உள்ள அரசினர் உயர்நிலைப் பள்ளியில் திருத்தணி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியிலிருந்து ரூபாய் 20 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட கலையரங்கம் கட்டிடத்தை பயன்பாட்டிற்கு மாவட்ட கழகச் செயலாளர் திருத்தணி எஸ். சந்திரன் எம்.எல்.ஏ, திறந்து வைத்தார். உடன் பள்ளிப்பட்டு தெற்கு ஒன்றிய செயலாளர் ஜி.ரவீந்திர, உள்பட கழக நிர்வாகிகள் அரசு அதிகாரிகள் பள்ளி மாணவ மாணவிகள் தலைமை ஆசிரியர் ஆசிரியர்கள் பலர் கலந்து கொண்டனர்.



சென்னை வடகிழக்கு மாவட்டம் மாதவரம் தொகுதிக்கு உட்பட்ட புழல் ஒன்றியம் விளாங்காடுபாக்கம் ஊராட்சி கண்ணம்பாளையம் கிராமத்தை சேர்ந்த மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு அணி துணை அமைப்பாளர் வே.பாரதியார் இல்ல புதுமனை புகுவிழாவை சென்னை வடகிழக்கு மாவட்ட செயலாளர் மாதவரம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் எஸ்.சுதர்சனம் தலைமை ஏற்று திறந்து வைத்ததார். உடன் புழல் ஒன்றிய கழக பொறுப்பாளர் வழக்கறிஞர் ச.அற்புதராஜ் மற்றும் கிளை கழக நிர்வாகிகள் கழக உடன்பிறப்புகள் கலந்து கொண்டனர்.



இராயபுரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட 50அ வது வார்டில் புதிய மழைநீர் கால்வாய்கள் அமைக்கும் பணியை இராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் ஐட்ரீம் இரா.மூர்த்தி ஆய்வு செய்தார். உடன் இராயபுரம் மேற்கு பகுதி செயலாளர் வ.பெ.சுரேஷ், சென்னை மாநகராட்சி ஊழியர்கள் உள்ளனர்.

### மாத்தூர் கா.தாமரைச்செல்வன் தலைமையில்

### ஏ.கதிரவன், எம்.சந்தோஷ், ஏ.தனசேகர் ஏற்பாட்டில்

# மாதவரம் 19வது வட்ட திமுக சார்பில் செம்மொழி நாள் மாபெரும் கிரிக்கெட் போட்டி!

### புழல் எம்.நாராயணன் பரிசுகள் வழங்கினார்!

மாதவரம், ஜூன் 12-

சென்னை வடகிழக்கு மாவட்டம், மாதவரம் வடக்கு பகுதி, 19ஆவது வட்ட திமுக சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு செம்மொழி நாள் மாபெரும் கிரிக்கெட் போட்டி நடைபெற்றது.

மாதவரம் வடக்கு பகுதி வட்ட திமுக சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு, மாத்தூர் எம் எம் பி ஏ இரண்டாவது பிரதான சாலையில் அமைந்துள்ள விளையாட்டு மைதானத்தில், மாவட்ட அளவிலான மாபெரும் கிரிக்கெட் போட்டி இரண்டு நாட்கள் இரவு பகலாக நடைபெற்றது.32 அணிகள் கலந்து கொண்ட இந்த போட்டிகளில் நாக்அவுட் முறையில் நடத்தப்பட்டு, அரையிறுதிக்கு நான்கு அணிகள் தேர்வு செய்யப்பட்டன. சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர் ஆகிய மாவட்டங்களில் இருந்து கலந்து கொண்ட இந்த அணிகளில் முதல் பரிசை ஏகே செலக்ட் சிந்தாதிரிப்பேட்டை அணியும், இரண்டாவது பரிசை மஞ்சமாக்கம் அணியும் பெற்றன.முதல் பரிசாக ரூபாய் 20000 மற்றும் பரிசுக்கோப்பையும், இரண்டாவது பரிசாக ரூபாய் 15,000 மற்றும் பரிசுக்கோப்பையும் வழங்கப்பட்டன.மேற்படி பரிசுகளை வெற்றி பெற்ற அணிகளுக்கு மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம்.நாராயணன் கலந்து கொண்டு வழங்கினார்.

இந்த நிகழ்ச்சியில் மாவட்ட வர்த்தக அணி தலைவர் மஞ்சம்பாக்கம் ஆர்.பாபு முன்னிலையில் நடைபெற்ற போட்டியில், மாவட்ட தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் எஸ்.உதயகுமார் ,19வது வட்ட துணைச் செயலாளர் வழக்கறிஞர் திருமலை கார்த்திக், இளைஞரணி நிர்வாகிகள் ர.விஜய் ஆனந்த்,ஜி.ராஜேஷ் கண்ணன், பகுதி மாணவரணி துணை அமைப்பாளர் என். பிரபு, முன்னாள் கவுன்சிலர் சின்னமாத்தூர் இரா.குகன், ஐ சி எப் கே விஜயகுமார், மாத்தூர் கே.குமார், நெடுஞ்செழியன், தமிழரசன், மஞ்சம்பாக்கம் சிவராமன், முகமது முஸ்தபா, சுமன், யுவராஜ், மணிகண்டன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டார்கள்

கலந்து கொண்ட விளையாட்டு வீரர்கள் மத்தியில் முத்தமிழ் அறிஞர் கலைஞரின் பிறந்த நாளை முன்னிட்டு பிறந்தநாள் கேக் வெட்டி விளையாட்டு வீரர்கள் ஒருவருக்கொருவர் வழங்கி மகிழ்ந்தனர்.இரவு பகல் என்று இரண்டு நாட்கள் நடைபெற்ற இந்த போட்டியை ஆயிரக்கணக்கான பொதுமக்களும் கழகத்தினிடம் கண்டு களித்தனர்.



தாம்பரம் மாநகராட்சி பெருங்களத்தூர் மண்டலம் வார்டு 55க்கு உட்பட்ட மேற்கு தாம்பரம் பாப்பன் கால்வாயில் ரூ.40 லட்சம் மதிப்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் தூர்வாரும் பணியினை மாநகராட்சி ஆணையாளர் சீ.பாலசந்தர் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வின் போது நான்காவது மண்டல குழு தலைவர் டி.காமராஜ் மாமன்ற உறுப்பினர் பெ. புகழேந்தி மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் உடனிருந்தனர்.




மாதவரம் வடக்கு பகுதி, 19 ஆவது வட்ட திமுக சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102 வது பிறந்தநாளை முன்னிட்டு, மாவட்ட அளவிலான மாபெரும் கிரிக்கெட் போட்டி 19ஆவது வட்டச் செயலாளர் மாத்தூர் கா. தாமரைச்செல்வன் தலைமையில் நடைபெற்றது. ஏ. கதிரவன், எம். சந்தோஷ், ஏ. தனசேகர் ஆகியோர் ஏற்பாட்டில் நடைபெற்ற இப்போட்டியில், முதல் பரிசு பெற்ற ஏகே செலக்ட் சிந்தாதிரிப்பேட்டை அணிக்கு 20000 ரூபாய் மற்றும் பரிசுக்கோப்பையும், இரண்டாம் பரிசு பெற்ற மஞ்சம்பாக்கம் அணிகளுக்கு 15000 ரூபாய் மற்றும் பரிசுக்கோப்பையும் மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் கலந்து கொண்டு பரிசுகளை வழங்கினார். இந்த நிகழ்ச்சியில் மாவட்ட வர்த்தக அணி தலைவர் மஞ்சம்பாக்கம் ஆர். பாபு, எஸ். உதயகுமார், திருமலை கார்த்திக் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டார்கள்.